[1973 நவம்பர் 26

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அவையுரிமைப் பிரச்சினை.

உறுப்பினர் திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் பேரவையைக் குறித்து கூறிய சொற்றொடர் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு

[முற்பகல் 10-00]

Mr. SPEAKER : Hon. members will remember that yesterday the hon. Member Thiru K. T. K. Thangamani raised a matter of privilege against the hon. Member Thiru M. A. Latheef for having used the expression "this House is going to dogs". Thiru M. A. Latheef while explaining his position had stated that the said expression containing the English idiom "going to dogs" meant that the "House was going to disorder.". He had, however, added that he had never meant any disrespect to the House or to any Member of the House. No doubt the phrase "going to dogs" is an English idiom meaning "going to ruin" or "going to disorder". I am satisfied that the hon. Member Thiru Latheef had never intended any disrespect to the House or to any Member of the House. Anyway, the use of the idiom in the House is not a happy thing and it cannot be said to be quite appropriate. However, in view of the explanation offered by the hon. Member Thiru Latheef, I think no further action is called for.

I wish to take this opportunity to draw the attention of the Press in connection with their reporting of the proceedings of the House. Normally, the hon. Members speak when they are called upon to do so by the Hon. Speaker. But, sometimes, it so happens that Members attempt to speak without the Speaker's permission and there are also cross talks among the members. These talks do not strictly form part of the proceedings of the House. When such cross talks are reported with undue prominence in the newspapers a wrong impression is likely to be created in the minds of the public about the proceedings of the Legislature, and this is not very conducive to the nurturing of our growing democracy in which the Press have got a major role to play. So, I earnestly appeal to them to use their discretion remembering their own responsibility in this matter.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மாநில கணக்காய்வு (அக்கவுண்டண்ட்-ஜெனரல்) அலுவலகத்தில் போடப்பட்ட தடையுத்தரவால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. ஏ. ஆர். மாரிமுத்து, டாக்டர் ஹாண்டே ஆகியோர் ஏ.ஜி. அலுவலகத்தில் போடப்பட்ட தடை உத்தரவு பற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். எப்படி அது ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் வரும் என்பதைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இது அண்மையில் நடந்த நிகழ்ச்சி; அதிலும் முக்கியமான ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. நமது மாநில அரசாங்கத்திற்கு இதிலே எவ்வளவு பொறுப்பு இருக்கிறது என்பதைப் பற்றி நாம் சற்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அக்கவுண்டன்ட்-ஜெனரல் ஆபீஸ் தனி நிறுவனமாக அரசியல் அமைப்புச் சட்டப்படி இருந்தாலும் அங்கு நடக்கின்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நமது அரசாங்கத்தின் அலுவல்களைப் பாதிக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. உதாரணமாக, பென்ஷன், பிராவிடன்ட் ஃபண்ட் போன்றவை எல்லாம் அவர்கள் மூலமாகத்தான் நம்முடைய ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த அலுவலகத்தை இரண்டாகப் பிரிவினை செய்ததன் காரணமாக இப்போது கிளர்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. அந்தக் கிளர்ச்சியின் விவரங்களைப்பற்றி நான் இங்கு விரிவாகக் கூறவில்லை. அவர்கள் சமாதானமான முறையில் ஆர்ப்பாட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருக்கின்ற இன்னொரு பதட்டமான நிலைமை என்னவென்றால் உயர்ந்த